©
தமிழ்நாடு அரசு
2017

பதிவெண்: எம்.

# திருவள்ளூர் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

**ஆணையின்படி வெளியிடப்பட்டது**

திருவள்ளூர், ஜூலை 5, 2017 [ எண் 10

ஆனி 21, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு—2048

## உள்ளாட்சிதுறை அறிவிக்கை

**பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் கீழ் ஆவடி பெருநகராட்சிக்கென உருவாக்கப்பட்ட துணை விதிகள் குறித்த அறிவிப்பு.**

ஆவடி பெருநகராட்சி

**(ந.க.எண். 2402/ எச்2/2017, நாள்: 25–05–2017)**

**பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளது. இந்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்தல், பயன்படுத்துதல், விநியோகம் செய்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்தல், தரம் பிரித்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிகளை முறைப்படுத்த அந்தந்த நகராட்சிக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆவடி பெருநகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது.

1) ஆவடி பெருநகராட்சி எல்லைக்குட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட 50 மைக்ரானுக்கு குறைவான நெகிழி (Carry bag) பைகள், ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் விரிப்புகள் போன்றவற்றை சேமித்த வைக்கவோ, விற்பணை செய்யவோ, விநியோகம் செய்யவோ, பயன்படுத்தவோ கூடாது என தடை விதிக்கப்படுகிறது. இத்தடையை மீறுபவர் மீது கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் நகராட்சி நிர்வாகத்தால் பறிமுதல் செய்யப்படும்.

2) பிளாஸ்டிக் பாட்டில் அல்லது பொட்டலத்தில் பொருட்களை விநியோகம் செய்யும் நிறுவனங்களே அவ்வாறு பயன்படுத்தப்பட்ட பாட்டில்களையும், பொட்டல உறைகளையும் திரும்ப பெற்றுகொள்ளுதல் வேண்டும்.

3) 50 மைக்ரானுக்கு அதிகமான தடை செய்யப்படாத கேரி பைகள் பயன்படுத்தும் நிறுவனங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/- வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.48,000/- செலுத்தி பதிவு செய்த பின்னரே சிறிய கேரி பை ஒன்றுக்கு ரூ.2/- வீதமும் பெரிய கேரி பை ஒன்றுக்கு ரூ.5/- வீதமும் விற்பனை செய்ய வேண்டும்.

தவறும் நபர்களுக்கு கீழ்க்கண்டவாறு அபராதத் தொகை வசூலிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| மொத்த விற்பனையாளருக்கு | = | ரூ.5,000/- (ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| சில்லறை விற்பனையாளருக்கு | = | ரூ.1,000/- (ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| விநியோகம் செய்பவருக்கு | = | ரூ.1,000/- (ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| உபயோகிப்பாளருக்கு | = | ரூ.500/- (ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத நிறுவனங்களுக்கு | = | ரூ.1,000/- (ஒவ்வொரு நிகழ்விற்கும்) |
| பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத குடியிருப்புகள் மற்றும் தனி நபருக்கு | = | ரூ.100/- (ஒவ்வொரு நிகழ்விற்கும்) |

4) மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்ட பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும், 1986ம் வருடத்திய மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்ட பிரிவு 15ன் படி ஆவடி பெருநகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

5) துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

6) தொடர் குற்றங்களுக்கு கூடுதலாக தினசரி ரூ.100/- வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

7) மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

(ஒப்பம்)-------------,
தனி அலுவலர் (ம) ஆணையர்,
ஆவடி பெருநகராட்சி.

ஆவடி,
25–5–2017.

(லேசர் அச்சடிப்புகள் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்)
தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால், புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.